# QB365 Question Bank Software Study Material

## சந்தை மற்றும் சந்தையிடுகையாளர் முக்கியமான 1 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்

## 12ம் வகுப்பு

## வணிகவியல்

மொத்த மதிப்பெண் : 50

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக**

45 x 1 = 45

1) பண்டங்கள் மற்றும் பணிகளை பணத்தின் அடிப்படையில் மாற்றம் செய்பவர் எவ்வாறு அழைக்கப்படுகிறார்?

(அ) விற்பனையாளர் **(ஆ) சந்தையிடுகையாளர்** (இ) வாடிக்கையாளர் (ஈ) மேலாளர்

2) சந்தையிடுகையில் சந்தையிடுகையாளர் முதலில் தெரிந்து கொள்ள விரும்புவது

(அ) வாடிக்கையாளரின் தகுதி (ஆ) பொருளின் தரம் (இ) வாடிக்கையாளரின் பின்புலம்
**(ஈ) வாடிக்கையாளரின் தேவைகள்**

3) உடனடிச் சந்தை எதன் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகிறது.

(அ) பொருட்கள் **(ஆ) பரிவர்த்தனை** (இ) ஒழுங்குமுறை (ஈ) காலம்

4) கீழ்கண்டவற்றுள் எது பங்குகள் மற்றும் பத்திரங்களை வாங்கி, விற்கும் நடவடிக்கையை மேற்கொள்கிறது.

**(அ) பங்கு சந்தை** (ஆ) தயாரிப்பு பொருள் சந்தை (இ) உள்ளூர் சந்தை (ஈ) குடும்ப சந்தை

5) பங்கு பரிவர்த்தனை சந்தை இவ்வாறு அழைக்கப்படுகிறது.

(அ) களச்சந்தை (ஆ) உள்ளூர் சந்தை **(இ) பத்திரங்களின் சந்தை** (ஈ) தேசிய சந்தை

6) ஒரு குடும்பத்தில் உறுப்பினர்களிடையே பண்டங்களையோ அல்லது பணிகளையோ பரிமாற்றுவது ________.

**(அ) குடும்பச் சந்தை** (ஆ) உள்ளூர் சந்தை (இ) தேசிய சந்தை (ஈ) களச் சந்தை

7) வாங்குவோர் மற்றும் விற்போர் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட நாடுகளுக்கிடையே சந்தையிடுகையில் ஈடுபடுவர்.

(அ) உள்ளூர் சந்தை (ஆ) தேசிய சந்தை **(இ) உலகளாவிய சந்தை** (ஈ) களச் சந்தை

8) உற்பத்தி பொருட்கள் அல்லது நுகர்வு பொருட்களை வாங்குதல் மற்றும் விற்பனை செய்வது

(அ) பங்குச் சந்தை (ஆ) உற்பத்தி மாற்று சந்தை **(இ) பண்டகச் சந்தை** (ஈ) தயாரிப்பு பொருள் மாற்று சந்தை

9) பொருட்களின் விலை சந்தை முழுவதும் ஒரே சீராக இருத்தல் - இது எந்த விதமான சந்தையின் நிபந்தனை ஆகும்.

(அ) முறையற்ற சந்தை **(ஆ) முறையான சந்தை** (இ) எதிர்கால சந்தை (ஈ) பண்டகச் சந்தை

10) ________ சந்தையில் முற்றுப் பெறாத தயாரிப்பு பொருட்கள் மட்டுமே சந்தையிடுகை செய்யப்படுகிறது.

(அ) முதன்மை சந்தை (ஆ) இறுதி நிலை சந்தை **(இ) இரண்டாம் நிலை சந்தை** (ஈ) நீண்ட கால சந்தை

11) சந்தையில் மக்கள் மத்தியில் தனக்கென நற்பெயரை உருவாக்கிக் கொள்வதன் மூலம் சந்தையில் ________ யை சமாளிக்க முடிகிறது.

**(அ) போட்டி** (ஆ) கூட்டம் (இ) தேவை (ஈ) அளிப்பு

12) எந்த ஊகச் சந்தையில் தேவை அளிப்பை விட அதிகமானது?

**(அ) குறுகிய கால சந்தை** (ஆ) நீண்ட கால சந்தை (இ) மிக குறுகிய கால சந்தை (ஈ) இவற்றில் எதுவுமில்லை

13) யார் ஒருவர் தன்னை சந்தையிடுகை பணியில் முழுமையாக ஈடுபடுத்திக் கொள்கிறாரோ அவரே ________ என்று அழைக்கப்படுகிறார்.

(அ) விற்பனையாளர் (ஆ) உற்பத்தியாளர் **(இ) சந்தையிடுகையாளர்** (ஈ) நுகர்வோர்

14) ________ ஆனது அரசின் சட்ட விதிகளால் கட்டுப்படுத்தப்படுவது அல்ல.

(அ) ஒழுங்கு முறை சந்தை **(ஆ) ஒழுங்கு முறையற்ற சந்தை** (இ) முறையான சந்தை
(ஈ) முறையற்ற சந்தை

15) இந்த சந்தையில் பொருட்களின் தேவை மற்றும் அளிப்பே விலை நிர்ணயம் செய்கிறது.

(அ) ஒழுங்கு முறை சந்தை (ஆ) முறையான சந்தை **(இ) ஒழுங்கு முறையற்ற சந்தை**
(ஈ) முறையற்ற சந்தை

16) சந்தை என்ற சொல் ___ சொல்லிலிருந்து பெறப்பட்டது.

(அ) பிரஞ்ச் **(ஆ) லத்தீன்** (இ) ஜப்பான் (ஈ) சைனீஸ்

17) "சந்தை என்பது வாங்குவோர் மற்றம் விற்போர் ஒருவருக்கொருவர் இணைந்து போட்டியிடும் இடம் அல்லது பகுதியை குறிப்பதாகும்." இந்த வரைவிலக்கணத்தை வழங்கியது

**(அ) பைல்** (ஆ) மோர் (இ) பீட்டர் (ஈ) ஆம்ஸ்டர்டாம்

18) சந்தை என்பது பின்வருவனவற்றைக் குறிக்கும் ஒரு சொல் ஆகும்.

(அ) வாங்குபவர் மற்றும் விற்பவர் ஒன்று கூடும் இடம் (ஆ) பண்டங்களின் பரிமாற்றம் நடை பெறும் இடம்
(இ) வர்த்தக தேவைகளின் செயல்பாட்டிற்கான ஒரு பகுதி **(ஈ) மேற் சொன்ன அனைத்தும்**

19) சந்தை என்பது ஒரு மையப்பகுதியாகும் என்று கூறியவர்

(அ) பைல் **(ஆ) கிளார்க்** (இ) ட்ரக்கர் (ஈ) கோட்லர்

20) சந்தை என்பது பின்வருவனவற்றைக் குறிக்கும் ஒரு சொல் ஆகும்.

(அ) வாங்குபவர் மற்றும் விற்பவர் ஒன்று கூடும் இடம் (ஆ) பண்டங்களின் பரிமாற்றம் நடை பெறும் இடம்
(இ) வர்த்தக தேவைகளின் செயல்பாட்டிற்கான ஒரு பகுதி **(ஈ) மேற் சொன்ன அனைத்தும்**

21) சந்தை ஏன் தேவைப்படுகிறது?

(அ) பண்டங்கள் மற்றும் பணிகளை பரிமாற்றம் செய்ய வழிவகுக்கிறது
(ஆ) பொருட்களின் தேவை மற்றும் அளிப்பை சரி செய்கிறது
(இ) சமுதாயத்தின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகிறது **(ஈ) மேற் சொன்ன அனைத்தும்**

22) புவியியல் அடிப்படையில் சந்தை இவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது.

(அ) உள்ளுர் சந்தை (ஆ) குடும்பச் சந்தை (இ) தேசிய மற்றும் பன்னாட்டுச் சந்தை
**(ஈ) மேற் சொன்ன அனைத்தும்**

23) ஒரு குடும்பத்தின் நெருங்கிய உறுப்பினர்களிடையே பண்டங்களையோ அல்லது பணிகளையோ பரிமாற்றிக் கொள்வது இவ்வாறு அழைக்கப்படுகிறது.

(அ) பன்னாட்டுச் சந்தை (ஆ) தேசிய சந்தை **(இ) குடும்பச் சந்தை** (ஈ) உள்ளுர் சந்தை

24) இத்தகைய சந்தையில் பண்டங்கள் மற்றும் பணிகள் ஒரு நாட்டின் மூலை முடுக்குகளிலும் கிடைக்கும்.

(அ) பன்னாட்டுச் சந்தை **(ஆ) தேசிய சந்தை** (இ) குடும்பச் சந்தை (ஈ) உள்ளுர் சந்தை

25) பண்டங்கள் மற்றும் பணிகளை பன்னாட்டு அளவில் சந்தையிடுகை செய்வதனை __ சந்தை எனலாம்.

**(அ) பன்னாட்டுச் சந்தை** (ஆ) தேசிய சந்தை (இ) குடும்பச் சந்தை (ஈ) உள்ளுர் சந்தை

26) இத்தகைய சந்தையானது ஒரு குறிப்பிட்ட வளர்ச்சியடைந்த தொழில் மையத்திலோ அல்லது நகரத்திலோ மேற்கொள்ளப்படுகிறது.

(அ) தயாரிப்பு பொருள் மாற்றுச் சந்தை **(ஆ) உற்பத்தி பொருள் மாற்றுச் சந்தை** (இ) தூய உலோகச் சந்தை
(ஈ) மூலதனச் சந்தை

27) தொழிற்சாலை சார்ந்த உற்பத்தி பொருட்கள் இவ்வகை சந்தையில் மேற்கொள்ளப்படுகிறது.

(அ) தூய உலோகச் சந்தை **(ஆ) தயாரிப்பு பொருள் மாற்று சந்தை** (இ) உற்பத்தி பொருள் மாற்று சந்தை (ஈ) பணச் சந்தை

28) நீண்ட கால நிதித் தேவை இச்சந்தையின் மூலம் பெற முடிகிறது.

(அ) தூய உலோகச் சந்தை **(ஆ) மூலதனச் சந்தை** (இ) உற்பத்தி பொருள் மாற்று சந்தை (ஈ) பணச் சந்தை

29) இச்சந்தையில் குறுகிய கால பத்திரங்கள் பரிமாற்றப்படுகிறது.

(அ) தூய உலோகச் சந்தை (ஆ) தயாரிப்பு பொருள் மாற்று சந்தை (இ) உற்பத்தி பொருள் மாற்று சந்தை **(ஈ) பணச் சந்தை**

30) இங்கே பங்குகள் மற்றும் கடன் பத்திரங்கள் வாங்கல் மற்றும் விற்றல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.

**(அ) பங்குச் சந்தை** (ஆ) பணச் சந்தை (இ) தூய உலோகச் சந்தை (ஈ) சில்லறைச் சந்தை

31) பின்வருவனவற்றில் ஒன்று முறையான அல்லது செம்மையான சந்தையின் நிபந்தனைகளுள் ஒன்று ஆகும்.

(அ) அதிக எண்ணிக்கை உள்ள வாங்குவோர் மற்றும் விற்போரை கொண்டிருத்தல்

(ஆ) பொருட்களின் விலை சந்தை முழுவதும் ஒரே சீராக இருத்தல்

(இ) வாங்கவோர் மற்றும் விற்போர் சந்தையை பற்றி தெளிவாக அறிந்திருத்தல் **(ஈ) மேற்சொன்ன அனைத்தும்**

32) முறையற்ற அல்லது செம்மையற்ற சந்தையின் இயல்புகளில் ஒன்று இதுவாகும்.

(அ) பொருட்கள் ஒத்த தன்மை இன்மை (ஆ) விலையில் ஏற்றத் தாழ்வு (இ) தகவல் தொடர்பில் குறைபாடு **(ஈ) மேற்சொன்ன அனைத்தும்**

33) சந்தையில் உற்பத்தியாளரிடமிருந்து நேரடியாக பொருட்களை மொத்தமாக கொள்முதல் செய்து சில்லறை விற்பனையாளரிடம் மொத்தமாக விற்பனை செய்வது _ எனப்படும்

(அ) சில்லறை விற்பனை சந்தை **(ஆ) மொத்த விற்பனை சந்தை** (இ) முதன்மைச் சந்தை (ஈ) பாகுபடுத்தப்பட்ட சந்தை

34) மொத்த விற்பனையாளர்களிடமிருந்து மொத்தமாக பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு அவற்றை வாடிக்கையாளர்களுக்கு நேரடியாக சிறிய அளவில் தேவைக்கேற்ப விற்பனை செய்வது ___ எனப்படும்.

**(அ) சில்லறை விற்பனை சந்தை** (ஆ) மொத்த விற்பனை சந்தை (இ) முதன்மைச் சந்தை (ஈ) பாகுபடுத்தப்பட்ட சந்தை

35) பொருளுக்கான விற்பனை நடவடிக்கை முடிவடைந்த அதே நேரத்தில் அப்பொருள் விநியோகம் செய்வது மட்டுமன்றி இவ்வாறு அழைக்கப்படுகிறது. உடன் உரிமை மாற்றமும் நடைபெறும் சந்தை___.

**(அ) களச் சந்தை** (ஆ) முறையற்ற சந்தை (இ) எதிர்கால சந்தை (ஈ) குறுகிய கால சந்தை

36) இது ஒழுங்குமுறை சந்தைக்கான உதாரணமாகும்.

(அ) கொல்கொத்தா பங்குச் சந்தை (ஆ) சென்னை பங்குச் சந்தை (இ) மும்பை பங்குச் சந்தை **(ஈ) மேற் சொன்ன அனைத்தும்**

37) இவ்வகைச் சந்தை அரசின் சட்ட விதிகளால் கட்டுப்படுதத்படுவது அல்ல.

(அ) ஒழுங்குமுறை சந்தை **(ஆ) ஒழுங்குமுறையற்றச் சந்தை** (இ) எதிர்காலச் சந்தை (ஈ) மிகக் குறுகிய காலச் சந்தை

38) பால், முட்டை, காய் மற்றும் கனிகள் போன்றவைகள் விற்பனை செய்யப்படும் சந்தை இவ்வாறு அழைக்கப்படுகிறது.

(அ) களச் சந்தை **(ஆ) மிக குறுகிய காலச் சந்தை** (இ) நீண்ட காலச் சந்தை (ஈ) முறையான சந்தை

39) நீடித்து உழைக்க கூடிய பொருட்களை விற்பனை செய்யும் சந்தையை இவ்வாறு அழைக்கலாம்.

**(அ) நீண்ட காலச் சந்தை** (ஆ) குறுகிய காலச் சந்தை (இ) மிகக் குறுகிய காலச் சந்தை (ஈ) மேற்சொன்னவற்றில் எதுவுமில்லை

40) வேளாண் விளை பொருட்கள் மட்டுமே இத்தகைய சந்தையில் வாங்குவது மற்றும் விற்பனை நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

(அ) இறுதி நிலைச் சந்தை **(ஆ) முதன்மைச் சந்தை** (இ) ஒழுங்கற்றச் சந்தை (ஈ) களச் சந்தை

41) பின்வருவனவற்றில் ஒன்று முக்கியத்துவத்தின் அடிப்படையில் சந்தையின் ஒரு வகையாகும்.

(அ) முதன்மைச் சந்தை **(ஆ) இறுதி நிலைச் சந்தை** (இ) இரண்டாம் நிலைச் சந்தை
(ஈ) மேற் சொன்ன அனைத்தும்

42) பண்டங்கள் பணிகளின் விற்பனைக்கான நடவடிக்கைகளை மேற்கொள்பவர் இவ்வாறு அழைக்கப்படுகிறார்.

**(அ) சந்தையிடுகையாளர்** (ஆ) சாதனையாளர் (இ) முற்போக்காளர் (ஈ) சந்தையில் இருப்பவர்

43) பின்வருவனவற்றை படிக்கவும்.
1. பண்டங்கள்
2. பணிகள்
3. அனுபவங்கள்
4. நிகழ்வுகள்
5. நபர்கள்
6. இடம்
7. தகவல்
8. கருத்துக்கள்
மேற்கண்டவற்றில் எவற்றை சந்தையிடலாம்?

(அ) 1, 3, 4. 6 (ஆ) 3, 4, 6, 8 (இ) 1, 3, 5, 8 **(ஈ) 1 முதல் 8 வரை**

44) சந்தையிடுகையாளர் ஒரு ____.

(அ) தூண்டுபவர் (ஆ) புதுமைபுகுத்துநர் (இ) ஒருங்கிணைப்பாளர் **(ஈ) மேற் சொன்ன அனைத்தும்**

45) பின்வருவனவற்றுள் ஒன்று சந்தையிடுகையாளரின் பணியாகும்.

(அ) சந்தை திட்டமிடல் (ஆ) வர்த்தக குறியீடு செய்தல் (இ) பொருட்களை சேமித்தல்
**(ஈ) மேற் சொன்ன அனைத்தும்**

**<u>கோடிட்ட இடங்களை நிரப்புக</u>** 5 x 1 = 5

46) மனித தேவைகளை பூர்த்தி செய்வதற்கு பொருட்கள் ________ மற்றும் ________ மேற்கொள்வதற்கான ஒரு செயல் ஆகும்.

**வாங்குவது, விற்பனை**

47) ________ சந்தை பல்வகைப் பொருட்கள் மற்றும் பல்வேறு விலைகளைக் கொண்டுள்ளது.

**செம்மையற்ற**

48) நீடித்து உழைக்கும் பொருட்களை கையாளும் சந்தை ________.

**நீண்ட காலச் சந்தை**

49) அமைப்பின் பல்வேறு பணிகளின் உதவியோடு பொருட்களை சந்தையிடுகை செய்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தும் மாற்றங்களை உருவாக்குபவர் ________.

**செயல்பாட்டாளர்**

50) ஒரு குறிப்பிட்ட பொருள் மட்டுமே சந்தையிடுகை செய்யப்படும் சந்தை ________.

**உற்பத்தி பொருள் மாற்று சந்தை**